நூற்பாலைகள் அமைக்கப்பட இருக்கின்றன. இவைதான் நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றன.

திரு. செ. சிவசாமி: கிழக்கு இராமநாதபுரம் மிகவும் வறண்ட பிரதேசமாகும். அங்கே ஒரு நூற்பாலை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக வைக்கப்பட்டிருந்தும்கூட, கிழக்கு இராமநாதபுரத்தில் உள்ள வறட்சி நிலையையும் கருத்தில் கொண்டு, நூற்பாலை துவங்குவதில் அதற்கு முதன்மை ஸ்தானம் கொடுத்து இந்த ஆண்டே அங்கு ஒரு நூற்பாலை அமைக்க வேண்டிய ஏற்பாடு செய்து கொடுத்தால் நிச்சயமாக அங்குள்ள கலவரங்களையெல்லாம் போக்குவதற்கும், அங்கே தொழில் கிடைப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் அரசு செய்வதன் மூலம் அங்கே நல்லதொரு நிலை ஏற்படச் செய்ய முடியும். ஆகவே அந்த அடிப்படையில் நூற்பாலை ஒன்றை அந்தப் பகுதியில் அமைக்கும் திட்டம் உண்டா?

(பதில் இல்லை).

திரு. ப. தீர்த்தராமன்: தர்மபுரி மாவட்டத்தில் ஒரு நூற்பாலை அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி, அந்த நூற்பாலையை பெண்ணாகரத்தில் ஆரம்பிக்க முன்வருவார்களா?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 944, 945, 946 ஆகியவை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு] ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### பாரதப் பிரதமர் பயணம் செய்ய இருந்த விமானத்திற்கு நேரயிருந்த விபத்து தவிர்க்கப் பெற்றது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழ்மிக்க சர்வதேசத் தலைவர்களில் ஒருவரும், மாதர்குல மணி விளக்காய் விளங்கும் இந்தியப் பேரரசினுடைய தலைமை அமைச்சருமாகிய மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அண்மையில் பயணம் செய்ய இருக்கும்போது விமானத்தில் நாசவேலை காரணமாக பழுதாக்கப்பட்ட

திரு. என். எஸ். வி. சித்தன்] [1981 ஏப்ரல் 29

இயந்திரங்கள், கருவிகளை தக்க தருணத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால் அதன்மூலம் நாட்டுக்கு நேர இருந்த ஒரு மிகப் பெரிய இழப்பு நேரிடா வண்ணம் தடுத்ததற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நான் மனமுவந்து பாராட்டுகிறேன். நாம் பெரிதும் மதித்து போற்றக்கூடிய அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நடக்க இருந்த விபத்திலிருந்து தப்பித்ததற்காக இறைவனுக்கு நன்றி சொல்லி அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து இன்னும் நாட்டிற்கு செயற்கரிய நல்ல பணிகளைச் செய்ய வேண்டும் என்று தமிழக மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சபை அந்த உணர்வுகளில் பங்கிட்டுக் கொள்கிறது. எல்லா உறுப்பினர்களுக்கும் எல்லாக் கட்சிக்காரர் களுக்கும் இதே உணர்வுதான். இந்திரா காந்தி அம்மையார் அவர்களோடு அரசியல் கருத்து வேறுபாடுகள் இருக்கலாமே தவிர அவர்கள் உயிரைப் பறிக்க வேண்டும் என்ற கருத்து அல்லது எண்ணம் எந்தக் கட்சிக்கும் இல்லை. அதுவும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தனை பேர்களுடைய வாழ்த்துக்களும் அந்த அம்மையாருக்கு உண்டு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

### (அ) சட்டமன்ற உறுப்பினர் அந்நிய நாட்டின் தூதுவர் பணியை ஏற்றல்

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இருக்கும் உறுப்பினர் ஒருவர் அந்நிய நாடு ஒன்றுக்கு கான்சலாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அதுகுறித்து இந்திய அரசியல் அமைப்புச் சட்ட விதி 191 (1) (ட)-படி உறுப்பினர் பதவியை இழக்கும் நிலை ஏற்படுகிறது. அப்படி பொறுப்பேற்ற உறுப்பினர் இந்த அவையில் தொடர்ந்து இருக்கின்ற நிலை சரியானதுதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்பியிருக்கிறார்கள். ஒருவர் இந்த மன்றத்திலே இருப்பவர், வெளிநாட்டுத் தூதுவராகப் பணியாற்றலாமா என்ற வினா ஒன்றை எழுப்பியிருக்கிறார்கள். அதற்கு, அரசியல் சட்டப்படி,

*Article* 192(1).—"If any question arises as to whether a member of a House of the Legislature of a State has become subject to any of the disqualificaions mentioned in clause (1) of Article 191, the question shall be referred for the decision of the Governor and his decision shall be final."